தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்டமுன்வடிவு திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஆறும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/72).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஆறும் திருத்த சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) தற்போதுள்ள 18(3) பிரிவின்படி, உபரி நிலம், 18(1) பிரிவின்கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து அரசிடம் உரிமை நிலை பெறுகிறது. இவ்வறிவிப்பு நடைமுறை மரபுகளை எல்லாம் பின் பற்றிய பிறகே வெளியிடப்படுகிறது. இச்சட்டத்தின் தொடக்க நாளுக்குப் பிறகு, உச்ச வரம்புப் பரப்புக்கு மேல் எவரும் நிலத்தைத் தமது உடைமையாக வைத்திருக்கக் கூடாது என்று இச்சட்டத்தின் 7-வது பிரிவு தடை செய்வதாயிருந்தாலும், இச்சட்டத்தின் தொடக்க நாளுக்குப் பிறகும், உபரி நிலம் அரசிடம் உரிமை நிலை பெறும் நாளுக்கு முன்பும், உபரி நிலத்தைப் 18-வது பிரிவின் (3) உட்பிரிவில் சொல்லியுள்ளதன் காரணமாக, நிலத்தின் சொந்தக்காரர் தொடர்ந்து வைத்திருப்பவராகிறார். சில தேர்வுகளில், இந்தக் கால அளவு பல ஆண்டுகளுக்கும் நீடிக்கிறது. இந்த இடைக் காலத்தில், நிலச் சொந்தக்காரர் உபரி நிலத்தைத் தொடர்ந்து அனுபவித்து வருகிறார். நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் உட்கருத்தின்படி, பொருத்த மான அதிகாரியால் முடிவாக அறிவிக்கப்படும் உபரி நிலம் உச்ச வரம்புப் பரப்பளவை நிச்சயிப்பதற்கான முக்கியமான நாளாகிய இச்சட்டத்தின் தொடக்க நாளிலிருந்தே, அரசிடம் உரிமை நிலைபெற வேண்டும் என்றும், நிலத்தின் சொந்தக்காரரோ, அதிலிருந்து உடைமையில் வைத்திருந்த காலத்திற்கு நிலத்தைப் பயன்படுத்தி அனுபவித்து வந்ததற்கு இழப்பீடாக ஒரு தொகையை அரசுக்குச்

* 4—12—72-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

செலுத்த உட்பட்டவராக வேண்டுமென்கிற கருத்தறிவிக்கப் பட்டுள்ளது. இந்நோக்கத்தை எய்துவதற்கு இச்சட்ட வரைவில் 3(2) பகுதி விழைகிறது.

இச்சட்டத்தின் தொடக்க நாளுக்குப் பிறகு, ஆனல் அறிவிப்பு நாளுக்கு முன்பு செய்யப்பட்ட நில மாற்றம் எதுவும், இச்சட்டத்தின் விதித் துறைகளை முறியடிப்பதாயின், அந்த மாற்றம் செல்திறன் உடையதல்ல என்று அனுமதி பெற்ற அதிகாரியால் 22-வது பிரிவின் படி அறிவிக்கப்படுகிறது. 10 (4) பிரிவின்படி, நிலத்தின் சொந்தக் காரர் தாம் வைத்திருக்கக்கூடிய உச்சவரம்புப் பகுதிக்குள் சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய நிலத்தை அவரே தெரிந்தெடுத்துக் கொள்ள லாம். பல நேர்வுகளில், 22-வது பிரிவில் சொல்லிய காலத்தில் நில மாற்றம் செய்துள்ள நிலத்தின் சொந்தக்காரர்கள், அவ்வாறு மாற்றம் செய்து, அம்மாற்றம் செல்திறனுடையதல்ல என்று அறிவிக் கப்பட்ட நிலத்தை உபரி நிலமாக அரசால் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்கிற தங்கள் விருப்பத்தைத் தங்கள் நிலச் சொத்து விவரக் கணக்கில் குறிப்பிட்டுள்ளனர். இதனல் நிலச் சொந்தக் காரர்களுக்கு இரட்டை அனுகூலம் உண்டாகிறது. அதாவது நிலத்தை விலைக்கு வாங்கியவரிடமிருந்து இவர் பெறுமானத் தொகை பெற்றுக்கொண்டதோடு அந்த உபரி நிலத்திற்காக அரசிடமிருந்தும் இழப்பீடு பெறுவதற்கு உரியவராகிறுர். இத்தகைய கருதாப் பலன் நிலச் சொந்தக்காரருக்குப் போய்ச் சேரக்கூடாது என்றும் 22-வது பிரிவின்படி நிலமாற்றம் செல்திறன் உடையது அல்ல என்று அறிவிக் கப்பட்ட நிலங்கள் சொத்து மாற்றம் பெறுபவரது உரிமைகள் பாதிக்கப்படாமல் சொத்து மாற்றுபவரது உச்சவரம்புப் பரப்பள வுக்குள் அனுமதி பெற்ற அதிகாரியால் கட்டாயமாகச் சேர்க்கப்பட வேண்டுமென்றும் அரசு முடிவு செய்துள்ளது. இதனல் விளையும் பலன், நிலத்தை விலைக்கு வாங்கியவர் நிலத்தை வைத்துக் கொள் வதில் தொல்லையிராது; சொத்து மாற்றுபவர் இழப்பீடு எதுவும் பெறுதற்கு உரியவர் ஆகார். இச்சட்ட வரைவில் 3(1) பகுதி இந் நோக்கத்தை நிறைவேற்ற விழைகிறது.

இதைக் கொஞ்சம் விளக்கிச் சொல்லிவிடலாம் என்று நினைக் கிறேன். இந்தச் சட்டத்தின்படி ஆதரைஸ்டு ஆபீசர்களுக்கு தங்களிடம் உள்ள உபரி நிலம் எவ்வளவு என்பதை நிலச் சொந்தக் காரர்கள்தான் சொல்ல வேண்டும். இந்த இந்த நிலங்கள் என்னுடைய சொந்த நிலங்கள், இன்ன இன்ன நிலங்கள் உபரி

1972 டிசம்பர் 12] [திரு .ப. உ. சண்முகம்]

நிலங்கள் என்று நிலச்சொந்தக்காரர்கள் தாம் சொல்ல வேண்டும், தம்முடைய சொந்த நிலத்தை இன்னது என்று பொறுக்கி எடுத்துக் கொள்ள உரிமை இந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக சிலர் என்ன காரியம் தவருகச் செய்கிருர்கள் என்ருல் இவர்கள் சொல்லி நிலத்தை ஆதரைஸ்டு அதிகாரிகள் எடுத்துக் கொள்வதற்கு இடைப்பட்ட காலத்தில் உபரி நிலத்தை விற்று விடுகிருர்கள். பின்னர் அதிகாரிகளிடம் விற்கப்பட்ட நிலம் தான் உபரியானது, தம்மிடம் இருப்பவை தம்முடைய சொந்த நிலங்கள் என்று சொல்லிவிடுகிருர்கள். உபரி நிலங்கள் என்று விற்கப்பட்ட நிலங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறபோது அந்த நிலத்தை வாங்கியவர் பாதிக்கப்படுகிருர். அதேசமயம் நிலக்காரர்களுக்கு நிலத்தை விற்றபோது ஒரு ஆதாயம் கிடைக்கிறது, அரசாங்கம் உபரி என்பதாக எடுத்துக்கொள்கிறபோது நஷ்டஈட்டுத் தொகை வேறு கிடைக்கிறது. இதனுல் நிலத்தை வாங்கியவர்கள்தான் பாதிக்கப்படுகிருர்கள். அதைத் தவிர்க்கவேண்டும் என்கிற காரணத்தினுல் தான் தம்முடைய உபரி நிலங்கள் எவை, சொந்த நிலங்கள் எவை என்பதை தீர்மானித்துக்கொள்வதற்கு நிலச்சொந்தக்காரருக்கு இது வரை கொடுக்கப்பட்டிருந்த உரிமை அகற்றப்படுகிறது, உபரி நிலங்களை விற்று இருந்தால் அவர்களிடம் இருக்கும் சொந்த நிலமே உபரி நிலமாக கருதப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும் என்பதுதான் இந்தச் சட்டத்தின் கருத்து. இதனுல் நிலத்தை வாங்கியவர்களுக்கு ஒரு பாதுகாப்பு, உச்சவரம்புச் சட்டத்தில் இருந்து தப்பி அரசாங்கத்தை மோசம் செய்ய நினைக்கிறவர்களுக்கு இடமிருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) மூன்ருவது திருத்தச் சட்ட வரைவின் 3 (8) பகுதியால் திருத்தப்பட்டுள்ள 21-எ பிரிவின்படி 1970 பிப்ரவரி 15-ம் நாளுக்கும், 1970 அக்டோபர் 2-ம் நாளுக்குமிடையில் பாகப் பிரிவினை அனுமதிக்கப்படத்தக்கதாகும். இச்சட்டத்தின் செயல் நோக்கத்தை முறியடிக்க 1970 அக்டோபர் 2-ம் நாளுக்குப் பிறகும், 22-வது பிரிவில் சொல்லிய காலத்திலும் செய்யப்பட்ட பாகப் பிரிவினையும் அனுமதிக்கப்படக்கூடாது என்பதுதான் இதன் நோக்கமாகும். இந்நோக்கத்தை இச்சட்ட வரைவின் 4-வது பகுதி எய்த முனைகிறது.

எந்த நிலம் குறித்த மாற்றம் 22-வது பிரிவின் படிச் செல்திற னுடையதல்ல என்று அறிவிக்கப்பட்டதோ அந்த நிலங்களை, சொத்து மாற்றுபவரது உபரி நிலங்களாகக் கொண்டு, அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தங்கள் சொத்து விவரக் கணக்கில் குறிப் பிட்டுள்ளவர்களுக்குத் தண்டனையளிக்க வகை செய்து, 88-எனும் புதிய பிரிவு இந்நோக்கத்தை நிறைவேற்ற இந்தச் சட்ட வரைவின் 5-வது பகுதி விழைகிறது.

இதுவரை நிலச்சட்டத்தில் பீனல் கிளாஸே கிடையாது. பீனல் கிளாஸை இப்பொழுது நாம் சேர்க்கின்றோம். கால அளவைப் பயன் படுத்திக்கொண்டு, ஏமாற்றுகின்றவர்களுக்குத் தண்டனை கொடுக் கின்ற பீனல் கிளாஸ் இப்பொழுது இருக்கிறது. எனவே, இந்தச் சட்டங்கள் சமுதாய சீர்திருத்தத்திற்காக வந்த சட்டங்கள் என்ற வகையில் இப்பேரவை ஏகமனதாக இவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தங்கள் மூலமாக கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத் திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஆளும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/72) ஆய்வுக்கு எடுத்துச் கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—
"That the Bill be passed".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.